# TAMIL NADU GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.26] CHENNAI WEDNESDAY, JULY 7,2010**

**Aani 23, Thiruvalluvar Aandu-2041**


## Part VI --- Section 2

(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**( அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./TR/ 5/ 2–8, 31–05–2010 நாளிட்டது )**
(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது என்பதாலும், மற்றும் அவை 2005 ஆகஸ்டு 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் (பகுதி VI – பிரிவு –2 – பின்னிணைப்பில் ) வெளியிடப்பட்டுள்ளன என்பதாலும்,

மற்றும் மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளின் 35(2)ஆம் ஒழுங்குமுறை விதியின் பொருள்கோள் குறித்து எழுந்துள்ள ஒருசில ஐயப்பாடுகளை நீக்குவதற்கு மற்றும் ஐயப்பாடு எதற்கும் அப்பால் மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதியின் நோக்கத்தை விளக்குவற்கு திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181ஆம் பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, முந்திய வெளியீட்டிற்குப் பின்பு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன்பின்பு இதில் “முதன்மை ஒழுங்குமுறைவிதிகள்” என்று குறிப்பிடப்படும்) மேற்சொன்ன ஒழுங்குமுறைவிதிகளை பின்வருமாறு திருத்தம் செய்கிறது, அதாவது :–

## திருத்தம்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(i) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான

விதிமுறைகள் மற்றம் வரையறைகள்) (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறைவிதிகள், தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 35ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல் :**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 35ஆம் ஒழுங்குமுறை விதியின் (2)ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் முதலாம் வாக்கியத்திற்குப் பதிலாகப் பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

*“மின்கொள்முதல் ஒப்பந்தத்திற்குட்பட்ட தற்போதைய மின்உற்பத்தி நிறுவனங்களுக்கான மின்கட்டணவீதம் மற்றும் வரன்முறைகளுக்குரிய ஷரத்துக்கள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாதிருக்கும் நிலையில் அந்நிறுவனங்களுக்கு அத்தகைய ஷரத்துக்களே பொருந்தும்”.*

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

**ரா. வெ. ராஜா**
செயலாளர்